சனிக்கிழமை, 20 ஜூன், 2009

# சீடு நிறுவனத்தின் நட்புறவு விழா

மதுரை, ஜூன் 19: சீடு தொண்டு நிறுவன 10-ம் ஆண்டு நிறைவையொட்டி, சிறப்பு நிகழ்ச்சியாக சுவிட்சர்லாந்து ஜீரிச் பிரெடன்பெர்க் கேண்டன் பள்ளியுடன் இணைந்து மதுரையில் வியாழக்கிழமை நட்புறவு விழா நடத்தப்பட்டது.

இணையதளம் மூலம் ஜீரிச் பள்ளிக் குழந்தைகளும் மதுரை சீடு இளைஞர்களும் தங்களுக்குள் அறிமுகம் செய்து கொண்டும் நட்புணர்வோடும் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பு சீடு இளைஞர்கள்-ஜீரிச் குழந்தைகள் இடையே உலக ஒற்றுமை, அன்பு, சமூக மதிப்பு, குழு உணர்வைக் கற்பிப்பதாக அமைந்திருந்தது.

இதில் கேண்டன் பள்ளி முதல்வர் ஜான்நிக்கோலஸ், லௌரா வில்லிஜர், சுவிட்சர்லாந்து, மதுரை சீடு நண்பர்கள், நிர்வாக அறங்காவலர்கள் கார்த்திக்பாரதி, அன்பரசன் மற்றும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் மன்சூர் அலி ஆகியோர் பங்கேற்றனர்.